கிந்தா வேலி தமிழ்ப்பள்ளி, பத்துகாஜா

தமிழ்மொழி

ஆண்டு 2

ஆசிரியை திருமகள் குப்புசாமி

திறன் : 1.4.2

கவிதையில் கூறப்பட்டுள்ள முக்கியக் கருத்துகளை எழுதுக.
பயிற்சி நூல் பக்கம் : 81

**கண்ணி 1:**

பள்ளிக்கு நிதமும் சென்றிடுவாய்- நல்ல
நூல்களைக் கற்றுத் தேர்ந்திடுவாய்.
ஆசான் சொல்லை மதித்திடுவாய்- நீ
நானிலம் போற்றிட உயர்ந்திடுவாய்

**கண்ணி 2:**

நல்லவர் நட்பை நாடிடுவாய்- உன்
நண்பரின் பிழைகளைப் பொறுத்திடுவாய்
நல்லுரை கேட்டுத் தெளிந்திடுவாய் -நீ
பண்புள்ள மாந்தனாய் விளங்கிடுவாய்.

நல்ல நண்பர்களுடன் சேர வேண்டும். அவர்கள் தவறு செய்தால் மன்னிக்க வேண்டும். நல்ல பேச்சுகளை கேட்க வேண்டும். பண்புள்ள மனிதனாய் வாழவேண்டும்.

பள்ளிக்கு நாள்தோறும் சென்று நல்ல புத்தகங்களைப் படித்துச் சிறந்திட வேண்டும். ஆசிரியர் சொல்லை மதித்து நடந்து உலகம் போற்றிட உயர்ந்திட வேண்டும்.

LIVEWORKSHEETS